# நாத்தனார் அண்ணிகளின் பிஸினஸ் கூட்டணி!




அருந்ததி சரஸ்வதி



சாந்தி

'என்ன பிஸினஸ் செய்யலாம்?' என்று ஐடியா தேடி அலைகிறீர்களா? கொஞ்சம் உங்களையே அலசிப் பாருங்கள். சிக்கும். சாந்தியின் சக்சஸ் சொல்வது இதைத்தான்!

**வெ**ளிநாட்டுக்குப் போவதையும், வருவதையும் சினிமாவில் வேண்டுமானால் ஒரு விமானம் ரன்-வேயில் நகர்வதைக் காட்டி சுலபமாக சொல்லிவிடலாம். ஆனால், அங்கே போகிறவர்களுக்குத்தான் அதன் பின்னால் ஒளிந்திருக்கும் நிஜமான கஷ்டங்கள் தெரியும். வெளிநாடு செல்வதற்கான விசாவுக்கான விசாரிப்புகளும், சம்பிர தாயங்களும் அவ்வளவு சிரமப்பட வைக்கும்!

ஆனால், "அதுகூட சுலபமான விஷயம்தான்! விசா தொடர்பா ஏ டு இஸட்... என்ன தெரியணும்னாலும் எங்க கிட்ட வாங்க. சிரமமே இல்லாம விமானத்தில் பறக்கற வழியை நாங்க காட்டறோம்!" என்கிறார்கள், சென்னை - அடையாறில், 'விசா வேஸ்' என்கிற நிறுவனத்தை நிர்வகிக்கும் சாந்தி, சரஸ்வதி, அருந்ததி என்கிற மூன்று பெண்கள்.

அவர்களின் அலுவலக வரவேற்பறையில் வரிசை கட்டி தொங்கும் வெவ்வேறு நாடுகளின் நேரங்களைக் காட்டுகிற கடிகாரங்கள், இந்தத் தொழிலின் தன்மையைச் சொல்கின்றன. ஆனால், "அண்ணி! அந்த அரும்பாக்கம் க்ளையண்ட் ஃபைலை எடுங்க!", "இந்தப் பொண்ணு போட்டோவைப் பார்த்தா உங்க நாத்தனார் பொண்ணு மாதிரியே இல்லே?" என்று அங்கே நம் காதில் விழும் உரையாடல்கள், ஏதோ தெரிந்தவர் வீட்டுக்குள் நுழைந்த உணர்வைத்தான் ஏற்படுத்துகின்றன.

"நாங்க ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவங்கதான்!" என்று உற்சாகக் குரலில் சொல்கிறார்கள், அந்த மூன்று பெண்களும். அலுவலக வேலைக்கு ஒருவர், வெளி வேலைக்கு ஒருவர், க்ளையண்ட்டுகளை கையாள்வதற்கு ஒருவர்... என்று வேலைகளைப் பகிர்ந்துகொள்ளும் அவர்களில், விசாவைப் பற்றி அதிகம் தெரிந்தவரும் இந்தத் துறையில் அதிக அனுபவம் உள்ளவரும் சாந்திதானாம்!

சாந்தியின் கணவர் அமெரிக்க தூதரகத்தில் வேலை பார்த்தவர். இந்த ஒரு விஷயம்தான் இந்த நிறுவனத்துக்கான ஆதார விதை!

இதுபற்றி நம்மிடம் பேசிய சாந்தி, "அவருக்கு தூதரகத்துல வேலைங்கிறதால அக்கம்பக்கம், தெரிஞ்சவங்கனு யாரா இருந்தாலும் விசா சம்பந்தமான சந்தேகங்களை என்கிட்ட கேப்பாங்க. நானும் அவர்கிட்ட விசாரிச்சு தெரிஞ்சுக்கிட்டு, அவங்களுக்கு விளக்குவேன்.

விசாவுக்கான அப்ளிகேஷன் ஃபில்-அப் பண்றது ரொம்ப முக்கியமான விஷயம். அதுக்காகவும் என்னைத் தேடி நிறையப் பேர் வருவாங்க. கிராமங்கள்ல லெட்டர் எழுதிக் கொடுத்தே சந்தோஷப்பட்டுக் கறவங்க இருப்பாங்களே... அந்த மாதிரி, நானும் இதை சந்தோஷமா பண்ணிக் கொடுத்துட்டு இருந்தேன். பன்னெண்டு, பதிமூணு வருஷமா இது தொடர்ந்துட்டு இருந்தது. என் கணவர் தூதரகத்துலருந்து வேறொரு வேலைக்கு மாறின பிறகும், இதை நான் நிறுத்தலை.

இதுக்கிடையில, எங்க பசங்க வளர்ந்து, அவங்களோட தேவைகளை அவங்களே பார்த்துக்கவும், எனக்கு போரடிக்க ஆரம்பிச்சது. 'என்ன பண்ணலாம்?'னு யோசிச்சுக்கிட்டு இருந்தப்பதான், என்னோட இந்த ரெண்டு அண்ணிகளும் இதேமாதிரி ஒரு தவிப்புல இருக்கறது புரிஞ்சது. உட்கார்ந்து பேசினோம். 'விசா வேஸ்' கம்பெனி உருவானது. இதோ, இதுவரைக்கும் கிட்டத்தட்ட 1000 பேருக்கு விசா வாங்கிக் கொடுத்துட்டோம்!" என்று பெருமையாக சொல்லும் சாந்தி, விசாவுக்காக அமெரிக்கத் தூதரகத்தில் நடத்தப்படும் நேர்முகத்தேர்வை எதிர்கொள்வது தொடர்பாக சிறப்பு பயிற்சியும் தருகிறாராம்.

விசா வாங்குவது பற்றிய சில நுட்பமான விஷயங்களை பகிர்ந்து கொண்டார் சரஸ்வதி.

"அப்ளிகேஷன்ல நாம எழுதியிருக்கிற விவரங்கள் பத்தி நேர்முகத் தேர்வுல விசாரிக்கறப்ப, கொஞ்சம்கூட முரண்படாம தெளிவா பதில் சொல்லணும். பேங்க்ல ஏகப்பட்ட பேலன்ஸ் இருக்கறதா ரீல் விடறது, வெட்டி பந்தா காட்டறதுனு ஏதாவது ஏடாகூடம் பண்ணிடறதாலதான் பல பேருக்கு விசா கிடைக்கறது சிரமமாயிடுது.

சில விஷயங்கள்ல பொய் சொல்லவும் வேண்டியிருக்கும். ஆனா, அதையும் தெளிவா சொல்லணும்கிறதுதான் முக்கியம். உதாரணத்துக்கு, நம்ம ஊர்லருந்து இப்போ அமெரிக்காவுக்கு அடிக்கடி போயிட்டு வர்றவங்க வயசான பெண்கள்தான். 'மகளுக்கோ மருமகளுக்கோ பிரசவம்... பக்கத்துல இருக்கணும்'ங்கறதுதான் அவங்களோட எண்ணமா இருக்கும். ஆனா, இந்தக் காரணத்தைச் சொன்னா விசா கிடைக்காது. 'அங்கே ஆஸ்பத்திரியிலயே நல்லா கவனிச்சுக்குவாங்க'னு அப்ளிகேஷனை நிராகரிச்சுடுவாங்க. நம்ம சென்ட்டிமென்ட்டெல்லாம் அவங்களுக்கு புரியாது. 'ஊரை சுத்திப் பார்க்கப் போறேன்'னு சொன்னாதான் இவங்களுக்கு விசா கிடைக்கும். ஆனா, அதை பயணத் திட்டம் பத்தின சரியான விவரங்களோட சொல்லணும்!" என்று விளக்கினார் சரஸ்வதி.

"வெளிநாடுகள்ல கணவனும் மனைவியுமா போகும்போது, கணவர்கிட்ட கேக்கற கேள்விக்கு கணவரேதான் பதில் சொல்லணும். மனைவிகிட்ட கேக்கற கேள்விக்கு மனைவியேதான் பதில் சொல்லணும். மாத்திச் சொன்னா, அதிகாரிகள் கடுப்பாகி, நிறைய கேள்விகளால துளைச்செடுப்பாங்க. இது தெரியாம அவங்ககிட்ட, ஏதோ நன்கொடை வசூல் பண்ண வர்றவங்ககிட்ட சொல்ற மாதிரி 'ஏதுவா இருந்தாலும் அவர்கிட்ட தாங்க கேட்கணும்'னு நம்ம பெண்கள் சொல்லிடக் கூடாதே... அதுக்குத்தான் இந்தப் பயிற்சி!" என்று புன்னகையோடு அருந்ததி சொல்ல, ரசித்துச் சிரிக்கிறார்கள் மற்ற இருவரும்.

ரா. கோகுலவாசநவநீதன்
படம்: ம. அமுதன்

## அப்பா!



**வெ**ற்றிலைச் சாறு தெறிக்க
அப்பா கொடுத்த
முத்தத்தில்
இப்போதும் மணக்கிறது,
அங்குவிலாஸ் புகையிலையும்
அப்பாவின் வாசனையும்!